3rd March 1966]

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : குழந்தைகள் பால் உணவு உற்பத்தி செய்கிற அமுல் ஸ்தாபனத்தார் கோயம்புத்தூர் பகுதியில் நீலகிரியில் கிடைக்கிற பாலேயும், கோயம்புத்தூரில் கிடைக்கிற பாலேயும் வைத்துக் கொண்டு அங்கு இதற்கு ஒரு சென்டர் ஏற்படுத்த பார்வையிட்டார்களா ? அது சம்பந்தமாக மாநில சர்க்கார் என்ன உதவி செய்தது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட நிபுணர்கள் கோவை, மற்ற இடங்களேப் பார்த்தார்கள். அங்கு உபரிப் பால் இருப்பதுபோலவும், ஆகவே மில்க் பவுடர் உற்பத்தி செய்யலாம் என்றும் ஆலோசனை சொன்னுர்கள். அவர்கள் இந்த உதவி பெற "யுனிஸெஃப்" இடம் அணுகலாம் என்று குறிப்பு கொடுத்தார்கள். ஆனுல் "யுனிஸெஃப்" லிருந்து வந்து பார்த்தவர்கள் அங்கு உற்பத்தியாகும் பால் "லிக்விட் மில்க்" ஆக இருக்கவே போதுமானதாகயில்லே. ஆகவே, பால் பவுடர் செய்யும் முயற்சியில் இந்த நேரத்தில் ஈடுபட வேண்டாம் என்று ஆலோசனை சொன்னுர்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பம்பாயில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலே வைத்திருக்கிருர்கள். அங்கு நிபுணர்களேப்போட்டுச் செய்தார்களோ என்னவோ தெரியாது. பற்றுக்குறை இருக்கிற இந்த நேரத்தில் எங்கே யாவது ஒரு இடத்தில் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலேயை வைக்க ஏன் தயக்கம் காட்டுகிருர்கள்.?

கனம் திரு. வெ. ராமைய்யா : பால் பற்றுக்குறை இருக்கிறபோது பவுடர் எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்னே.

தென்னுற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு

*163. **கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தென்னுற்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு 1964–65-ல் ஆடிட் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், பணம் தவருன முறையில் வழங்கப்பட்டிருப்ப தாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) இல்லே.

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு விற்பனே சங்கம்

*164 **கேள்வி—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டையில் உள்ள மத்திய கூட்டுறவு விற்பனே சங்கத்தில் உர ஊழல் சம்பந்தமாக அதிகாரிகள் யாரேனும் 1965 டிசம்பரில் கைது செய்யப்பட்டார்களா ?

(இ) அதன்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) இது குறித்துப் போலீஸ் புலனுய்வு நடத்தி வருகிறது.

திரு. பி. முருகையன் : புதுக்கோட்டை சென்ட்ரல் பாங்க் தலேவர் அவர்கள் புதுக்கோட்டையில் உள்ள சென்ட்ரல் ஸ்டோரில் எந்தவிதமான அங்கமும் வகிக்க கூடாது என்று சர்க்கார் விதி இருந்தும் அவர் அந்த சென்ட்ரல் ஸ்டோரில் உதவித் தலேவராக இருப்பதினுல்தான் இந்த

ஊழல்கள் நடந்து இருக்கின்றன என்பதை சர்க்கார் சுட்டிக்காட்டியும் அவர் இதுவரையில் அங்கு இருப்பதால் இந்த நிலைமை ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : என்னிடம் கனம் அங்கத்தினர் சொல்கிற தகவல் இல்லை. முக்கிய கேள்விக்கு பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். வி.எஸ்.ஆர்.—செக்ரட்டரியை ஸஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது.

Jain temples

*165 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) the places where Jain temples are located in the State ;

(*b*) whether any representations have been received from the Jains on the preservation of these temples, architecture etc., and

(*c*) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No information is available with the Government or with the Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

(*b*) and (*c*) Yes. A printed mahajar has been received from Sri T. S. Sripal on behalf of the Tamilnad Jain public in March 1965 requesting Government assistance for the preservation, renovation and repairs of certain Jain temples. He has listed about 17 temples which require urgent repairs. Action can be taken by the Hindu Religious and Charitable Endowments (Administration) Department only in respect of the Jain temples to which the Hindu Religious and Charitable Endowments Act, 1959 are extended. Three such temples have been sanctioned Government grant for repairs and renovation for 1965–66.

திரு. சா. கணேசன் : இந்தமாதிரி சமணர் பள்ளிகள், பாழிகள் நூற்றுக்கணக்கானவை தமிழகத்தில் இருக்கின்றன என்பதும் அவை பராமரிப்பற்று சிதலமாகிக்கொண்டு வருகின்றன என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த நிலையில் சமணர்களின் தொகை அருகிக் கொண்டு வருவதாலும், ஆலயங்கள் பலவாக இருப்பதினாலும், பராமரிக்கமுடியாத நிலை இருப்பதால் அந்த ஆலயங்களை ஓரளவிற்கு செப்பனிட்டும் அங்குள்ள பல விக்கிரகங்களை எல்லாம் தொகுத்துக்கொண்டுவந்து ஒரு இடத்தில் வைத்து ஒரு காட்சிசாலை மாதிரி அமைக்க ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் இந்த ஆலயங்களை எல்லாம் நமது
9–00 a.m. சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். அதன் பின்னால் அதற்கான நோட்டிஃபிக்கேஷன் பிறப்பித்த பின்னால்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். நான் குறிப்பிட்டது போன்று, இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற மூன்று ஆலயங்களிலும், நல்ல சிற்ப வேலைகள் இருக்கின்றன. நல்ல விக்ரகங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் இதற்கான நோட்டி∴பிக்கேஷன் செய்யப்பட்டு இப்போது உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வதற்கும் அரசாங்கம் முயற்சி செய்யும்.